website: **www.greavescotton.com** and corporate announcement section of **www.nseindia.com** and **www.bseindia.com**.

RAJSHREE
PEOPLE PASSION PROGRESS

# RAJSHREE SUGARS & CHEMICALS LIMITED

Regd Office: 'The Uffizi', 338/8, Avanashi Road, Peelamedu, Coimbatore 641 004
Tel (0422) 4226222 Fax (0422) 2577929 CIN: L01542TZ1985PLC001706
E-Mail: rscl@rajshreesugars.com; Website: www.rajshreesugars.com

## NOTICE

NOTICE is hereby given that the 1st Extraordinary General Meeting (EGM) of the Members of the Company will be held on Wednesday, the 10th February 2016 at 10.00 a.m. at the Chamber Hall, Indian Chamber of Commerce and Industry, Avanashi Road, Coimbatore – 641 018. The notice of EGM, Attendance slip and Proxy Form have been sent to the members to their registered email address on 13th January 2016 and by registered post to the members who have not registered their e-mail with the Company/depository participant, on 14th January 2016. The EGM Notice is also available at the website of the Company.

A member entitled to attend and vote at the EGM is also entitled to appoint a proxy to attend and vote on a poll instead of himself / herself and the proxy need not be a member of the Company. The instrument appointing the proxy should, however, be deposited at the registered office not less than forty-eight hours before the commencement of the Meeting.

In compliance with the provisions of Companies Act, 2013 and Listing Regulations, the Company is pleased to provide e-voting facility for transacting all the business proposed at the 1st EGM through Central Depository Services (India) Limited (CDSL).

a) The business may be transacted through e-voting / ballot form.
b) The date and time of commencement of remote e-voting: 7th February 2016 - 9.00 AM.
c) The date and time of end of remote e-voting: 9th February 2016 – 5.00 PM.
d) Cut - off date : 3rd February 2016
e) Any person who acquires Shares of the Company and becomes Member of the Company after dispatch of notice and holding Shares as of cut - off date may obtain the login id and password by sending a request to helpdesk.evoting@cdslindia.com or to the RTA M/s. SKDC Consultants Limited at email id info@skdc–consultants.com or contacting them at the address as mentioned hereunder.
f) The Members may note that:
   1. Remote e-voting shall not be allowed beyond 9th February 2016 – 5.00 PM.
   2. The facility for voting through ballot form shall be made available at the EGM and the Members attending the meeting who have not cast their vote by remote e-voting shall be able to exercise their right at the meeting through ballot form.
   3. A Member may participate in the EGM even after exercising his / her right to vote through remote e-voting but shall not be allowed to vote again in the meeting.
   4. A person whose name is recorded in the Register of Members or in the Register of beneficial owners maintained by the Depositories as on the cut – off date only shall be entitled to avail the facility of remote e-voting as well as voting in the EGM.
   5. The notice of the meeting is displayed at the website, namely, www.rajshreesugars.com and www.evotingindia.com
   6. In case of any query kindly email at helpdesk.evoting@cdslindia.com or contact at the following address:
      S.K.D.C. Consultants Ltd., Kanapathy Towers, 3rd Floor, 1391/A-1, Sathy Road, Ganapathy, Coimbatore - 641 006; Telephone No.91-422-6549995, 2539835, 2539836 Fax: +91 422 2539837 Email: info@skdc-consultants.com
g) The result of voting on the resolutions shall be declared within 2 days of conclusion of the EGM. The results declared along with the Scrutinizer's report shall be placed on the Company's website and on the website of CDSL for the information to the members and communicated to the Stock Exchanges.

For and on behalf of
**RAJSHREE SUGARS & CHEMICALS LIMITED**

Place: Coimbatore
Date : 14th January 2016

**M PONRAJ**
Company Secretary

அனைவரும் வருக!!

RAJSHREE

# ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.

பதிவு அலுவலகம்: "தி உஃபிஸி",
338/8, அவினாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் - 641004.
தொ.பே.எண்: (0422) 4226222 ஃபேக்ஸ்: (0422) 2577929 CIN: L01542TZ1985PLC001706
மின்அஞ்சல்: rscl@rajshreesugars.com; வலைதளம்: www.rajshreesugars.com

## அறிவிப்பு

கம்பெனி உறுப்பினர்களின் முதலாவது அசாதாரண பேரவைக் கூட்டம் (EGM) பிப்ரவரி 10, 2016, புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சேம்பர் ஹால், இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரி, அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641018 என்ற முகவரியில் நடைபெறவிருக்கிறது. EGM-ன் அறிவிப்பு, வருகை பதிவுச்சீட்டு மற்றும் பதிலாள் படிவம் (Proxy Form), ஆகியன ஜனவரி 13, 2016 அன்று உறுப்பினர்களின் பதிவு செய்யப்பட்ட மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. கம்பெனியுடன் மின் அஞ்சல்களைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு மேற்கூறிய ஆவணங்கள் ஜனவரி 14, 2016 அன்று பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆவணங்கள் கம்பெனியின் வலைதளத்திலும் உள்ளது.

EGM-ல் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமையுடைய உறுப்பினர் அவருக்கு பதிலாக கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க பதிலாள் ஒருவரை நியமிக்கலாம். பதிலாளாக இருப்பவர் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கத் தேவை இல்லை. ஆயினும், பதிலாள் படிவம், கூட்டம் துவங்குவதற்கு குறைந்தது 48 மணி நேரங்களுக்கு முன்னர் பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கம்பெனிகள் சட்டம் 2013 மற்றும் பட்டியலிடும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு EGM-ல் திட்டமிடப்பட்ட அலுவல்கள் சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மூலமாக மின்னணு வாக்களிப்பு வசதியை அளிப்பதில் கம்பெனி மகிழ்ச்சியடைகிறது.

(அ) அசாதாரண பேரவைக்கூட்டத்தின் அலுவல்கள் மின்னணு வாக்களிப்பு மூலமாகவோ அல்லது வாக்குப் படிவம் மூலமாகவோ செயல்படுத்தப்படும்.

(ஆ) பிப்ரவரி 7, 2016 காலை 9 மணிக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும்.

(இ) பிப்ரவரி 9, 2016 மாலை 5 மணிக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடியும்.

(ஈ) இறுதித் தேதி (Cut-Off date): பிப்ரவரி 3, 2016.

(உ) EGM-ன் அறிவிப்பு அனுப்பிய பின்பு, எவரேனும் பங்குகளை வாங்கியிருந்து அதை இறுதி தேதியன்று வரை வைத்திருந்தால் அவரும் மின்னணுவாக்குப்பதிவில் பங்கேற்கலாம். அத்தகைய உறுப்பினர்கள், தங்களது நுழைவுச் சொல் (login id), கடவுச் சொல் (Password) போன்றவற்றை பின்வரும் மின்னஞ்சல் மூலமாக கேட்டு பெற்றுக்கொள்ளலாம் helpdesk.evoting@cdslindia.com மற்றும் info@skdc-consultants.com அல்லது நிறுவனத்தின் "பதிவாளர் மற்றும் பங்குமாற்றும் முகவரின்" கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்

(ஊ) உறுப்பினர்கள் கவனத்திற்கு:

(1) தொலைதூர மின்னணு வாக்களிப்பு பிப்ரவரி 9, 2016 மாலை 5 மணிக்கு மேல் அனுமதிக்க இயலாது.

(2) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவில் பங்கேற்காத உறுப்பினர்கள், வாக்குப்படிவம் மூலமாக அசாதாரண பேரவைக் கூட்டத்தில் வாக்களிக்க இயலும்.

(3) தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தமது வாக்குரிமையை பயன்படுத்திய பின்பும் உறுப்பினர்கள் அசாதாரண பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(4) இறுதி தேதியன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவாகியுள்ள நபர்கள் அல்லது டெப்பாசிட்டரியில் பதிவாகியுள்ள நபர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் அசாதாரண பேரவைக் கூட்டத்தில் வாக்களிக்க உரிமை பெறுவர்.

(5) EGM-ன் அறிவிப்பு பின்வரும் இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது : www.rajshreesugars.com மற்றும் www.evotingindia.com

(6) இதில் சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின் helpdesk.evoting@cdslindia.com-க்கு மின்அஞ்சல் அனுப்பவும், அல்லது பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

SKDC கன்சல்டன்ஸ் லிமிடெட் (பதிவாளர் மற்றும் பங்குமாற்றும் முகவர்) கணபதி டவர்ஸ், மூன்றாவது தளம், 1391/A-1, சத்தி சாலை, கணபதி, கோயம்புத்தூர் 641006, தொ.பே. எண்: 91-422-6549995, 2539835, ஃபேக்ஸ்: +91 422 2539837 மின்அஞ்சல்: info@skdc-consultants.com

(எ) கூட்டம் முடிவுற்ற 2 நாட்களுக்குள் தீர்மானங்கள் மீதான வாக்களிப்பின் முடிவுகள் அறிவிக்கப்படும். உறுப்பினர்களின் தகவலறிதலுக்காக மேற்கண்ட வாக்களிப்பின் முடிவுகள் ஆய்வாளரின் அறிக்கையுடன் சேர்த்து கம்பெனியின் வலைதளத்திலும், CDSL வலைதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும். முடிவுகள் பங்கு சந்தைகளுக்கும் அறிவிக்கப்படும்.

இடம்: கோயம்புத்தூர்
தேதி : ஜனவரி 14, 2016

ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட்-க்காக
மா. பொன்ராஜ், நிறுவனச் செயலாளர்.

DINAMANI | 15-1-2016 EGM notice
13 x 8 col. cm.